


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், கழிப்பறையை சரியாக பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான “கழிப்பறை திருவிழா” 3.0 நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் இணைய தளத்தை தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக தலைவர் நா.இளையராஜா, தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் செயலாளர் டாக்டர் ச.உமா, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, தூய்மை பணியாளர் நல வாரியத்தின் துணைத் தலைவர் திருமதி எஸ்.கனிமொழி பத்மநாபன் உள்பட தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், கழிப்பறையை சரியாக பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான ”கழிப்பறை திருவிழா 3.0 நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளி மாணவர்களுக்கான சுகாதாரம் குறித்த புத்தகத்தை வெளியிட்டார்.

## கழிப்பறைக் கருத்தரங்க கருத்துகளுக்கு அரசு நிச்சயமாக செயல்வடிவம் கொடுக்கும்:

# தூய்மைப் பணியாளர்கள் செய்வது, தூய்மைப் பணி மட்டுமல்ல மனிதகுலத்திற்கே செய்கின்ற ஒரு மாபெரும் தொண்டு!

## சென்னையில் கழிப்பறைத் திருவிழா நிறைவு நாளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

*சென்னை, ஜூலை 7 -*

***சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சர்வதேசக் கழிப்பறைத் திருவிழா (இன்டர்நேஷனல் டாய்லெட் ஃபெஸ்ட்டிவல்) நிறைவு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நிறைவு உரையாற்றினார்.***

***விழாவில், தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தின் புதிய இணையதளத்தைத் தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் அப்போது அவர் வழங்கினார்.***

***இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான சுகாதார கையேட்டினை வெளியிட்டு, குறும்படங்கள், புகைப்படக் கண்காட்சிகள் மற்றும் கழிப்பறைச் சுகாதாரம் குறித்த ‘டாய்லெய் எக்ஸ்போ’ போன்ற விழிப்பு உணர்வு நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு, அவற்றை ஏற்பாடு செய்திருந்த ஏற்பாட்டாளர்களை வாழ்த்திப் பேசினார்.***

***விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய நிறைவு உரை வருமாறு:***




*சென்னை மாநகராட்சி மற்றும் ‘வாஸ் லேப்’ இணைந்து நடத்துகிற சர்வதேசக் கழிப்பறைத் திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கழிப்பறைச் சுகாதாரம் தொடர்பாக சென்னையில், பல்வேறு இடங்களில் கடந்த ஒரு மாத காலமாக ஏராளமான நிகழ்ச்சிகளை, நீங்கள் நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள். அதற்கான நிறைவு விழாவையொட்டி, கலைவாணர் அரங்கில் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கடந்த இரண்டு நாட்களாக நடத்தியதுடன், அதில் பங்கேற்கின்ற வாய்ப்பையும் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்ததற்குப் பாராட்டையும், இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அத்தனைப் பேருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

### கழிப்பறைச் சுகாதாரம்

*பொதுவாக, கழிப்பறைச் சுகாதாரம் போன்ற விஷயங்களை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்வது இல்லை. அதை நாம் தவிர்த்துவிட்டு, கடந்து சென்று விடுகிறோம். ஆனால், நோயற்ற வாழ்விற்கு, கழிப்பறைச் சுகாதாரம் என்பது மிகமிக அவசியமானது என்பதை நீங்கள் இந்நேரம் உணர்ந்து இருப்பீர்கள். அதை உணர்ந்ததால், இன்றைக்கு இந்த இரண்டு நாள் நிகழ்ச்சி உங்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடந்துகொண்டு இருக்கிறது. அதை நீங்களும் தொடர்ந்து நடத்தி வருகிறீர்கள்.*

*பள்ளி மாணவர்களிடையே கழிப்பறைச் சுகாதாரம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவது, கழிப்பறைச் சுகாதாரம் சார்ந்த புத்தாக்கம் மற்றும் முதலீட்டாளர்கள் கருத்தரங்கை நடத்துவது, பொதுக் கழிப்பிடங்களை மக்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பது, பள்ளிக்கு ஒரு சுகாதார அமைச்சரை உருவாக்குவது, கழிப்பறைகளில் ஏதாவது இடர்கள் ஏற்பட்டால், அதை சரிசெய்வதற்காக கழிப்பறை சரி பார்ப்புகளை அமைப்பது போன்ற திட்டங்களை, நான் மனதார பாராட்டுகிறேன், வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன்.*

*இன்றைய தினம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் உருவாக்கிய தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுமார் 900 பேர் இங்கு வருகை தந்துள்ளீர்கள். உங்களால்தான் இன்றைக்கு தமிழ்நாடு மிகுந்த ஆரோக்கியமான நிலையில் இருக்கிறது. அதற்கு முதலில் எனது பாராட்டும், நன்றியும்.*

### சென்னையின் அன்னை

*‘தூய்மைப் பணியாளர்கள்தான் சென்னையின் அன்னை’ என்று பல நேரங்களில் பெருமையாகக் குறிப்பிட்டது உண்டு. அந்த அளவிற்கு, ஒரு தாய் தன் பிள்ளையை பார்த்துக்கொள்வதுபோல தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான் சென்னையைப் பார்த்துக் கொள்கிறீர்கள். சென்னை என்ற குழந்தை உங்களின் கைகளில் பத்திரமாக இருக்கிறது.*

*சென்னை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் உங்களின் பணி என்பது மகத்தானது, போற்றத்தக்கது. உங்களின் பணி மட்டுமல்ல, உங்களின் உள்ளமும் மிகவும் தூய்மையானது என்பதை நான் அறிவேன். இன்னும் சொல்லப்போனால், நீங்கள் செய்வது வெறும் தூய்மைப் பணி மட்டுமல்ல, அது மனிதகுலத்திற்கே நீங்கள் செய்கின்ற ஒரு மாபெரும் தொண்டு. மனிதக் கழிவுகளை, மனிதர்களே அகற்றும் கொடுமையை முற்றிலும் அழிக்க வேண்டும் என்பதுதான் நம் திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் ஒரே லட்சியம்.*

### தொழில் முன்னோடிகள்

*அதனால்தான், நம் முதலமைச்சர் அவர்கள் அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளான கடந்த டிசம்பர் 6ஆம் தேதி தூய்மைப் பணியாளர்களை தொழில்முனைவோர்களாக்கி, அவர்களை உயர்த்த வேண்டும் என்ற உன்னதத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன்படி, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்களுக்கு 100 கழிவுநீர் அகற்றும் வாகனங்களை, மானியத்துடன் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.*

*அதுமட்டுமல்ல, நீங்கள் பாதுகாப்பாகப் பணி செய்ய வேண்டும் என்று, அதற்கான பயிற்சியை வழங்க, தூய்மைப் பணியாளர் மேம்பாட்டுத் திட்டத்தை 50 கோடி ரூபாய் செலவில் நம் முதலமைச்சர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு தொடங்கிவைத்தார். தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் மூலம் நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் 90 சதவிகித மானியத்துடன் 1,000 வீடுகளை நம் முதலமைச்சர் வழங்கியுள்ளார். தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான கடன் திட்டம் போன்றவற்றை உங்களுக்காகவும், உங்களின் குடும்பத்தினருக்காகவும் வழங்க நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.*

### கருத்துகளுக்குச் செயல்வடிவம்

*அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த நிகழ்ச்சி இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. தூய்மைப் பணியாளர்களுக்கு தாட்கோ மூலம் பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்டன. விபத்துக் காப்பீடு, கல்வி உதவி, திருமண உதவித் தொகை, ஓய்வூதியம், கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வழங்குவது போன்ற உதவிகள் உங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.*

*உங்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, நிதியுதவிக்கான காசோலைகளையும் இங்கு வழங்கி இருக்கிறோம். கடந்த ஒரு மாதமாக நடந்த சர்வதேசக் கழிப்பறைத் திருவிழாவைத் தொடர்ந்து, இரண்டு நாட்களாக இங்கு பரிமாறிக்கொள்ளப்பட்ட கருத்துகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க, நம் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.*

*எனவே, இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக நடத்திய அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்த வேண்டும். அதேபோல் இங்கு நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அத்தனை தூய்மைப் பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.*

### பங்கேற்றவர்கள்

*அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகர மேயர் பிரியா, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., தாட்கோவின் தலைவர் இளையராஜா, தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, நல வாரியத்தின் துணைத் தலைவர் கனிமொழி, சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் கந்தசாமி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கூடுதல் செயலர் உமா ஐ.ஏ.எஸ்., தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைமைச் செயலர் கோவிந்தராஜ், சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா ஐ.ஏ.எஸ்., தூய்மை மிஷனின் தலைமை நிர்வாக அலுவலர் கங்கா திலீப், சீனஸ் அமைப்பின் நிறுவனர் அஸ்வின்குமார், வாஸ்லேப் அமைப்பின் நிறுவனர் செவின் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற “கழிப்பறை திருவிழா” 3.0 நிகழ்ச்சியில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 பள்ளிகளில் சுகாதார விழிப்புணர்வு மேற்கொள்ளும் 150 மாணவ சுகாதார அமைச்சர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், கழிப்பறையை சரியாக பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான “கழிப்பறை திருவிழா” 3.0 நிகழ்ச்சியையொட்டி அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சி மற்றும் அரங்கங்களை பார்வையிட்டார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற “கழிப்பறை திருவிழா” 3.0 நிகழ்ச்சியில் தூய்மை பணியாளர் நலவாரியத்தின் கீழ் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவித் தொகைகான காசோலைகளை வழங்கினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், கழிப்பறையை சரியாக பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான “கழிப்பறை திருவிழா” 3.0 நிகழ்ச்சியில், கழிப்பறைகளில் தூய்மைப் பணி போற்கொள்ளும் டாய்லெட் ரிப்பேர் சுபே வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.7.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில், நடைபெற்ற “கழிப்பறை திருவிழா” 3.0 நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் சங்கத்திற்கு தாட்கோ மூலமாக சிறு வணிகக் கடனாக 25.00 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.